Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Feminism and Dalit Feminism

**M. Karthikeyan,** Reg. No.: 204PHD23F7555TAM, Research Scholar, PG and Research Department of Tamil, Kalaignar Karunanidhi Govt Arts College, Tiruvannamalai, Tamil Nadu, India.
**ORCiD:** https://orcid.org/0009-0001-2017-0328
**Dr.B.Subbulakshmi,** HOD & Assistant Professor of Tamil, PG & Research Department of Tamil, Kalaignar Karunanidhi Govt Arts College, Tiruvannamalai, Tamil Nadu, India.
**ORCiD:** https://orcid.org/0009-0003-9092-6543
**DOI: 10.5281/zenodo.14744617**

## Abstract

*Feminist literature has been a significant turning point in the development of Tamil literature. It has challenged the traditional portrayal of women in Tamil literature and has provided a platform for women to express their experiences and problems. Over time, feminist literature has questioned many stereotypical customs and practices that have been imposed on women. In Tamil literature, most of the works created by women in the Tamil literary tradition (except for modern literature) did not speak about the injustices faced by women. It was only after the emergence of feminism as a concept that women's education, rejection of dowry, equal pay for equal work, and social, political, and economic liberation became possible. Dalit people suffer a lot to lead their lives with dignity and peace. They are targeted by the so-called higher strata of people. The emergence of feminism helped the Dalit women to confront such injustice inflicted upon them. The objective of this article explore how feminism sided in the development of Dalit Feminism and how it aided them in overcoming such atrocities and getting liberation in all spheres of life.*

**Keywords:** Feminism, Liberal Feminism, Radical Feminism, Dalit Feminism.

## References

[1] Anbukarasi. *Dalit Penniyam*. Dalit Aathara Mayyam, Tamil Nadu, Iraiyiyal Kalloori, Madurai-67, 1999.
[2] *Encyclopedia Britannica*. Inc Cigaco, Thokuppu, 15, Iyal 9, P.154.
[3] Kunasekaran, Karu, Azha. *Putiya Kodanki* (K.Tho). Sitra Adukkam, Chennai-94, 1995.
[4] Subramaniyam, N. *Indiya Sintanai*. South Asian Books. Yazhppanam, Ilankai, Mutharpathippu, 1993.
[5] Prema. Ira. *Penniya Anukumuraikal*. Ulakattamizh Aarachi Niruvanam, Chennai, 1994.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# பெண்ணியமும் தலித் பெண்ணியமும்

**ம . கார்த்திகேயன்**, பதிவு எண்: 204PHD23F7555TAM, முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0001-2017-0328**
**முனைவர்பா.சுப்புலெட்சுமி,** நெறியாளர்& தமிழ்த்துறைத்தலைவர், கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0003-9092-6543**
**DOI: 10.5281/zenodo.14744617**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கிய வளர்ச்சிப்போக்கில் நவீன இலக்கியமான பெண்ணியம் மரபு வழியில் பின் பற்றி வந்த பல நிகழ்வுகளை கட்டுடைத்துள்ளன. அவ்வகையில் காலங்காலமாக பெண்களுக்கென்றே வகுக்கப்பெற்ற பல வாழக்காறுகளை கேள்விக்குள்ளாக்கியுள்ளன. தமிழிலக்கிய மரபில் பெண்களால் படைக்கப்பெற்ற படைப்புகள் கூட, (நவீன இலக்கியங்கள் நீங்கலாக) பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளைப்பற்றி பேசவில்லை எனலாம். பெண்ணியம் என்கின்ற கருத்தாக்கம் தோன்றிய பிறகு தான் பெண்கல்வி, இட ஒதுக்கீடு, வரதட்சணை மறுப்பு, சம வேலைக்கு சம ஊதியம், சமூக, அரசியல், பொருளாதார விடுதலை ஆகியன சாத்தியமாகின. பெண்விடுதலைக்காக உருவாக்கப்பெற்ற பெண்ணியத்திற்குள்ளே பேசும் பொருளாக உள்ள தலித் பெண்ணியத்தைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்ணியம், தாராளவாத பெண்ணியம், தீவிர பெண்ணியம், தலித் பெண்ணியம்.

**முன்னுரை**

ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் கலைச் சொல்லை தமிழில் 'பெண்ணியம்' என்று கூறுகிறோம். பெண்ணைக் குறிப்பதற்காக இலத்தின் மொழியில் பயன்படுத்தப்பட்டச் சொல் 'Femina' என்பதாகும். இச்சொல் பெண்களுக்குரிய இயல்பினை உடையவள் என்ற பொருளில் வழங்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. இச்சொல் 1980 –ல் பாலினச் சமத்துவக் கோட்பாட்டாளர்களையும் பெண்ணுரிமை பெறச் செயல்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பத்தப்பட்டது. தமிழில் பெண்ணியம், பெண்ணியவாதம், பெண்ணுரிமை ஏற்பு போன்ற பொருள்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**"பெண்ணியம் என்னும் சொல் மிகவும் அண்மைக் காலத்தில் தான் தோன்றி வளர்;ந்து வருகிறது. இது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அதோடு பெண்ணியம் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் அவள் ஆண்களுக்குச் சமமானவள் என்னும்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தையும் கருவாகக் கொண்டு இயங்குகிறது" (என்சைக்லோபீடியா பீரிடானிகா, ப. 154)** எனச் சொற்களஞ்சியம் பெண்ணியம் என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கிறது. **"பெண்ணியம், தலித்தியம் என்ற இரண்டும், அடக்கி ஒடுக்கப்பட்டவர்களின் உரத்த எழுச்சியாகும். காலம் காலமாகத் தாம் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம் என்பதையும் தாம் அடிமைப் படுத்தப்பட்டு இருக்கிறோம் என்பதை உணர்ந்தபோது பிறந்தவைகளே இவ்விரு இயக்கங்களும்" (பிரேமா. இரா. ப., 158)** என்பதாக தலித்தியத்தையும் பெண்ணியத்தையும் ஒன்றாக மதிப்பிடுகிறார் இரா.பிரேமா.

**வரலாற்று நோக்கில் பெண்ணியம்**

'1960' களுக்கு பிறகு தோன்றிய பெண்ணிய கருத்தாக்கம் தனது வரலாற்றை ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்துள்ளது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் எழுந்த உலகளாவிய மாறுதல்களும், போக்குகளும் பெண்ணியச் சி;ந்தனைகளை வெகுவாக மாறுதலுக்கு உள்ளாக்கின.

விமர்சனத் தன்மையும் கலகலத் தன்மையும் பெண்ணியத்திதின் அடிப்படைக் குரலாக முன் வைக்கப்பட்டன. இவ்வகையான பெண்ணியச் சி;தனையாளர்கள் தன் மீது சுமத்தப்பட்டுள்ளதை மொழியின் சுமைகளைத் தள்ளி எறியவும், சுய மொழிக்கான தேவைகளை வலியுறுத்தவும், தேடல்களை மேற்கொள்ளவும் செய்தன. மொழியியலில் அமைப்பியல்வாதம் ஏற்படுத்திய புதிய அணுகுமுறைகள், ஆணாதிக்கத்தின் தன்மைகளை அறியும் ஆய்வுகளுக்கு வழிவகுத்தன. அமைப்பியலைத் தொடர்;ந்து பின் அமையியல் தோற்றம் பெற்றது. பின் அமைப்பியல் பெண்ணியத்திற்கான சில அடிப்படைகளை உருவாக்கித் தந்தன. பெண்எப்பொழுது தன்னைப் பற்றி எழுதுகிறாள்? இவை போன்ற பல கேள்விகள் பெண்கள் முன் வைக்கப்பட்டன. இக்கேள்விகளுக்குத் தீர்வுகாணும் வகையில் பெண்ணியம் ஒரு சமூக விடுதலை இயக்கம் என்பதற்கும் மேலாகத் தீவிர கலை இலக்கிய விமர்சனமாக மாறியது.

ஜீலியா கிறித்தேவா, ஹெலன் போன்றவர்கள் பெண்ணிய உளவியல் மற்றும் இலக்கிய வாதங்களை ஒருங்கே வளர்த்தனர். ஒருத்தி பெண்ணாகப் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள் என்றார் பிரெஞ்சுப் பெண்ணியவாதியான சீமோன் தபூவா, காலப்போக்கில் பெண்ணியம் பல்வேறு வகைகளாகவும் வளர்ச்சிப் பெற்றன. வரலாற்றில் பெண் விடுதலைச் சிந்தனை, ஆங்காங்கே தோன்றி மறைந்த போதிலும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகக் குறிப்பாக கடந்த நூற்றாண்டில் மிகவும் தீவிரமாகவும் தெளிவாகவும் வெளிப்படத் தொடங்கின. உலகத்தின் சிந்தைப்போக்கை உலுக்கிய வர்க்கச் சிந்தனையை அடிப்பையாகக் கொண்ட மார்க்சிய சித்தாந்தத்திற்கும் பின்னர் பெரும்புயலாக உருவாகி, இன்று அனைத்து தளங்களிலும் அடித்தள அசைவினை கொடுத்துக் கொண்டிருப்பது பெண்ணியச் சித்தாந்தமேயாகும். கலை, இலக்கியம், அரசியல், சமயம், பண்பாடு, இறையியல்,

மொழி இவைகள் அனைத்திலும் பெரிய மாற்றத்தை பெண்ணியச் சி;ந்தனை உருவாக்கியுள்ளது.

**பெண்ணியத்தின் வகைகள்**

பெண்கள் இன்று வரை சமூகத்தில் தாழ்த்தப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும், சுரண்டப்பட்டும் வாழ்வதன் காரணங்களையும், அம்முறை மாற்ற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் சமூகச் சீா்;திருத்தவாதிகள் பல்வேறு காலகட்டங்களில் ஆராய்ந்து வந்துள்ளனர். இவர்களது கருத்துக்கள் பெண்ணியக் கோட்பாடுகள் என்றழைக்கப்படுகின்றன. இக்கோட்பாடுகளை கீழ்வரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. **சோசலிசப் பெண்ணியம் (Socialist Feminism)**
2. **மிதவாதப் பெண்ணியம் (Libral Feminism)**
3. **தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism)**
4. **தலித் பெண்ணியம் (Dalit Feminism)**

**சோசலிசப் பெண்ணியம் (Socialist Feminism)**

முற்போக்குப் பெண்ணியம் (Socialistic Feminism) ஏற்கனவே நடைமுறையில் உள்ள பெண்கணியக் கோட்பாட்டிற்குள்ளேயும், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது சோசலிசப் பெண்ணியம் ஆகும் பொதுவுடமைச் சி;ந்தனையாளர்கள் இப்பெண்ணியத்தை ஆதரித்தனர் எனலாம். சமூகத்தில் பல்வேறு தளங்களில் பெண்கள் பணிபுரிகின்றனர். ஆண்களும் பணிபுரிகின்றனர். ஆனால்ஆண்களுக்கு ஒரு கூலி முறையும் பெண்களுக்கென ஒரு கூலி முறையும் வழங்குவதையும் பெண் உழப்பைச் சுரண்டுவதையும் பொதுவுடமைச் சி;ந்தனைவாதிகள் எதிர்த்தனர். அதற்காக பல்வேறு கட்டப் போராட்டங்களை நடத்தினர். நாள் முழுவதும் செய்யப்படுகின்ற வீட்டுவேலைகளுக்கு ஊதியம் இல்லாததால் பெண்ணின் உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போனது எனலாம்.

முதலாளித்துவ சமுதாயம் தேவை நேர்ந்த போதெல்லாம் அவர்களைப் பயன்படுத்திக் கொண்;டது இன வேறுபாடுகளைப் போலவே முதலாளித்துவ பாலின வேறுபாடும் 70 மதலாளித்துவ சமூகத்திற்கு முக்கியமாய் அமைந்தது. குறைந்த கூலிக்கு உழைக்கும் உழைப்பாளிகளாக பெண்கள் மாற்றப்பட்டனர். உடலுழைப்பைத் தரும் பெண்களைப்; பேணிக்காப்பதே தன் கடமையாக சோசலிசவாதப் பெண்ணியம் பங்காற்றின.

**மிதவாதப் பெண்ணியம் ((Libral Feminism)**

ஆண், பெண் பாலின வேறுபாட்டை நீக்கி பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக உருவானதாகும். மிதவாதப் பெண்ணியத்தின் வரலாறு கி.பி 18ஆம் நூற்றாண்டிலேயே துவங்கிவிடுகிறது. மேலை நாடுகளில் பகுத்தறிவுச் சித்தாந்தம் (Age of Reason) தொடங்கிய போதே பெண் பற்றிய சிந்தனையும் பிறந்துவி;ட்டது. மனித இனம் பகுத்தறிவுயைதென்றால்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

மானிட இனத்தின் மறுபாதியாக உள்ள பெண்ணியமும் பகுத்தறிவுடையதுதான். தனிமனித சுத்திரம் வலியுறுத்தப்பட்ட தென்றால் அது ஒரு பெண்ணுக்கும் உரியதுதான்.

மனித சமூகத்திற்கென உள்ள அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கும் உரிமை ஆணிற்கு உள்ளது போலவே பெண்ணியத்திற்கும் உண்டு. பெண் என்பவளை பாலியல் அடிப்படையில் பார்க்காமல் அவளும் ஓர் மனிதப் பிறப்பாகவே பார்க்க வேண்டும். இயல்பான அவளுடைய உரிமைகள் மறுக்கப்பட வேண்டும் எனறு "மேரி உஸ்டன் கிராப்ட்" எதிர்ப்புக் குரல் எழுப்பினார். பகுத்தறிதல், மேலாண்மை செய்தல் ஆணின் குணமென்றும், கீழ்படிதவல், மென்மை, எதிர்ப்பின்மை, கற்பு ஆகிய இவைகள் பெண்ணினத்தின் குணமென்றும், கற்பிக்கப்பட்டதால் அவள் எல்லாத் தளத்திலும் பின்தங்கிப் போனாள். மனித அறம் இரு இனத்திற்குப் பொதுவானவை காலங்காலமாக பெண்ணிற்கு கல்வி மறுக்கப்பட்டதால் பெண் அறியாமையிலிரு;து விடுதலைப் பெற முடியாமல் போனது.

**தீவிரவாதப் பெண்ணியம் ((Radical Feminism)**

பெண்ணியச் சிந்தனைளில் ஒன்றான தீவரவாதப் பெண்ணியம், குடும்பம் என்ற கட்டமைப்பை உடைப்பது வரை செல்கிறது. குடும்பம் என்பது தந்தை வழிச் சமுதாயத்தின் அதிகார மையமாக கருதப்படுவதே இதற்கு காரணம் எனத் தீவிரவாதப் பெண்ணியச் சிந்தனையாளர்கள் கருதுகின்றனர். குடும்பம் பற்றி மார்க்ஸ், ஏங்கல்ஸ் கூறிய கருத்தை நா. சுப்ரமணியம் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்.

> தந்தை வழிச் சமுதாயம் உருவானபொழுது, குடும்ப ஒருதார மணம் இவை தொடர்பான **ஒழுக்க மதிப்பீடுகள் என்பன உருவாகி நிலைபெற்றுவலிட்டன என்பதும் இவற்றின் விளைவே பெண்ணடிமைத்தனம் என்பதும் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரால் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எனவே குடும்பம் என்ற அதிகார மையத்திடமிருந்து பெண் விடுதலையை எய்த முற்படுவதை நியாயப்படுத்துவது இயலாத ஒன்று அல்ல. (சுப்ரமணியம்.நா, ப., 272)**

என மார்க்சியம் குடும்பத்திலிருந்து பெண் வெளியேறத் துடிக்கின்ற கட்டாயத்தை எடுத்துக் கூறுகின்றது.

இந்தியச் சமூகத்தில் பெண் தாய் அல்லது மனைவி என்ற நிலையில் தான் பெரும்பாலும் அடையாளப்படுத்தப்படுகிறாள். குடும்பம் என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில்தான் அவளது வாழ்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. **"இந்தியச் சமூகத்தில் பெண் குழந்தை வரப்போகிற கனவனுக்காக வாழப் போகிற அடிமை! அதற்காகத் தான் நாம் தயாரிக்கப்படுகிறோம் என்ற மனோபாவத்தை அப்பெண் சிறுமியாக இருக்கும்போதே அடையும்படியாகக் குடும்பத்தின் நிர்வாக அமைப்புகள் அமைந்துள்ளன" (பஞ்சாங்கம்.க. ப. 13)** என்பது குடும்பச் சூழலில் பெண் எவ்வளவு இறுக்கி வைக்கப்படுகிறாள், குடும்பம் என்ற பொறுப்பில் தொன்று தொட்டு எவ்வாறு பெண்ணின் மீது சுமத்தப்படுகிறது என்பதை

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

எடுத்துக்காட்டுகிறது. எனவே, பெண் குடும்பத்தைவிட்டு வெளியேறித் தனது உரிமைகளையும் சுதந்திரத்தையும் தக்க வைத்துக் கொள்வது என்பது இந்தியச் சூழலில் அவசியமானதாகத் தீவிரவாதப் பெண்ணியக் கருத்தாளர்கள் எண்ணுகின்றனர்.

**தீவிரவாதப் பெண்ணியவாதிகள் தந்தை வழிச் சமூக அமைப்பில் எதிரியாகி தந்தை வழிச் சமூக மரபை மாற்ற வேண்டும் என்று போராடி வருகின்றனர்.**

> **பெண்ணடிமைத்தனம் பொருளாதரத்தில் மட்டும் வேறுபட்டதல்ல ஆணும் பெண்ணும் சம அளவில் பொருளீட்டினாலும் பெண், ஆணுக்கு பாலியல் உறவில் அடிமைப்பட்டவளாகவே நடத்தப்படுகிறாள். (தேவதத்தா, ப. 7)**

> **பெண்ணடிமைத் தனத்திற்கு ஆண்களே காரணம் என்பதால், ஆணைப் பகைவனாக எண்ணி, ஆண் மேலாண்மையை வெறுத்து, பாலியல், வேறுபாட்டை முற்றிலுமாக போக்க தீவிரமாக எண்ணியதால் தீவிரவாதப் பெண்ணயலாளரின் வாழ்க்கையில் ஆணுக்கு இடமில்லாமல் போனது. பாலியல் உரிமை, உடம்பின் மீதான கட்டுப்பாட்டு, விடுதலைக் காதல், தன்னின அனுபவம், குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்பு ஆகிய தீவிரவாதப் பெண்ணியத்தின் செயல்பாடுகளாயின. ஆண் மேலாண்மையை முழுவதுமாய் போக்க பாலியல் ரீதியான புரட்சி தேவை என்றனர். பெண்ணியம் பற்றிய வழிப்புணர்வை ஏற்படுத்துவதின் மூலம் மரபு, பாலியல் கோட்பாடு ஆகியவற்றை முற்றிலும் தகர்க்க முடியும் என கருதினர். (தேவதத்தா, ப., 65)**

**சமூகப் பெண்ணியம் (Radical Feminism)**

பண்பாட்டு ஒடுக்குதலை நீக்கிப் பொருளாதாரச் சமத்துவம் பெறச் செயல்படுகிறது. சமூக, சமய, பண்பாட்டுச் சிந்தனைகளோடு பெண்ணியத்தின் பெருமைகளையும் பெண்மையின் உன்னதத்தையும் பேணிக்காப்பதையே இப்பெண்ணியம் வலியுறுத்துகிறது.

**தலித் பெண்ணியம் (Dalit Feminism)**

அடிப்படை உரிமைகளின்றி வாழும் ஒடுக்கப்பட்ட பெண்களின விடுதலையை நோக்கமாகக்க் கொண்டது. ஆதிக்க சாதிப் பெண்கள் பெரும்பாலனோர் அடிப்படைத் தேவைகளுக்காகப் போராடுவதில்லை. சாதியப் ஒடுக்கு முறைகளுக்கும் பலியாவதில்லை. ஆனால், இந்த இரண்டு நிலைகளிலும் தலித் பெண்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே தலித் பெண்ணியம் சாதிய அடக்கு முறையையும், பாலியல் வல்லுறவுகளையும் எதிர் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. தலித் பெண்ணியத்தைப் பற்றி எழுத்தாளர் ப. சிவகாமி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். **"பிறப்பால் ஒடுக்கப்பட்டவர்களன் தலித்துகள், பெண்களும் ஆவர். மனித குலத்தின் மீதான சகல ஒடுக்கு முறைகளிலிருந்தும் அதனை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டதே தலித் பெண்ணியம் ஆகும். ஆதிக்க சக்திகளின் ஒடுக்குமுறைக் கருவிகளான நிறுவனங்கள் யாவற்றையும் இது கேள்விக்குள்ளாக்கும். சொல்லப்போனால் தலித் பெண்ணியம் என்பது மரபு வழியான இறுகிப்போன**

**நிறுவனங்களுக்கு எதிரான பெண்ணியக் குரலே" (அன்புக்கரசி, மோகன்லார்பீர் (தொ.ஆ) ப. 12)** என்கிறார்.

**"தலித் பெண்ணியம் என்பது பெண்ணியவாதத்திற்கு எதிரான ஒன்றல்ல என்பதோடு அது இதுகாறும் பேசப்பட்டு வரும் பேதாபேதங்களுக்கு இடமான பெண்ணியத்திதற்குள் மலிந்து கிடக்கின்ற உள் முரண்பாடுகரைளக் கேள்விக்குள்ளாகி, அவற்றைக் களைவதற்கான சாத்தியயப்பாடுகளை முன் வைக்கின்றது. இவ்வாறு முன் வைப்பதன் மூலம் முரண்பாடுகளை நீக்கப்பட்ட ஒரு பெண்ணிய சமுதாயத்தை அது விரும்புகிறது" (குணசேகரன்.கரு. அழ, ப. 49)** என்று கே. ஏ. குணசேகரன் தலித் பெண்ணியத்தை வரையறை செய்கிறார்.

சாதியமும் போராட்டங்களும் இம்மண்ணில் காலூன்றியபோது, தலித் பெண்ணிய போராட்டங்களும் உருவாயின. ஆதிக்கச் சாதிப் பெண்கள், நடுத்தர குடும்பப் பெண்கள் பொருளீட்டல் காரணமாக நிர்வாகப் பொறுப்பு, குடும்பப் பொறுப்பு ஆகிய இரட்டைச் சுமைகளை சுமக்கின்றர். ஆனால் சாதீய முறையில் தலித் பெண்கள் மிகுந்த வேதனைகளுக்கு உள்ளாகின்றனர். அன்றாட உணவுக்கான கூடுதல் உடலழைப்பு, உழைத்தாலும் உழைப்புக்கேற்ற ஊதியம் இன்மை, பணியிடங்களில் ஏற்படும் பாலியல் வேற்றுமைகளாலும், தீண்டாமையாலும் சமூகக் கட்டமைப்பாலும் மும்முனைத் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். "கெய்ல் ஓம்வெட்" என்பவர் பெண்ணியம் என்பது ஒடுக்கப்பட்ட ஒரு பிரிவினரான பெண்களின் விடுதலைச் சித்தாந்தமே" (அன்புக்கரசி, மோகன் லார்பீர் (தொ.ஆ), ப.4.) என்கிறார்.

தலித் பெண்களின் ஒடுக்குதல் என்பது ஆணாதிக்கத்தாலும், சாதியத்தாலும். பொருளாதரத்தாலும் என மூன்று நிலைகளில் ஒடுக்கப்படுகின்றனர். எனவே தான் பெண்களின் வாழ்வியல் பிரச்சனைகளில் இருந்து தலித் பெண்களின் பிரச்சனைகள் என்பது பிரித்துப் பார்க்க வேண்டிய சூழல் நிலவுகிறது. இதனை வலியுறுத்தும் வகையில் சஜன் குறிப்பிடும் மேற்கோள் கருத்து அவசியமானதாகும். "தலித் ஆண் உயர் சாதியினரின் தாழ்த்துதலை மட்டுமே எதிர்க்கொள்ளும் போது, தலித் பெண் உயர் சாதியினரின் தாழ்த்துதலோடு தன் சாதி ஆண்களின் தாழ்த்துதலையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இங்குதான் தலித் பெண்ண்ியம் கருத்தாக்க வடிவம் பெறுகிறது. தலித் பெண் தன் விடுதலையை இருவேறு ஆதிக்கச் சக்திகளிடமிருந்து போராடிப் பெற்றாக வேண்டும்" பெண்ணியம் என்பது சாதி, மதம் இவைகளின் ஏற்படுகின்ற ஒதுக்குதல்களையெல்லாம் பார்க்காமல் சமூகத்தில் பெண் இனத்திற்கு ஏற்படுகின்ற அநீதிகளை எதிர்கொள்ளும் தன்மையில் மட்டுமே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தலித் பெண்ண்ியம் என்பது என்னென்ன சவால்களை இந்தச் சமூகத்தில் எதிர்கொள்கிறது என்பதைக் கீழ்வருமாறு காணலாம். தலித் பெண்களின் பிரச்சனைகள் என்பது பிற சாதிப் பெண்களின்

பிரச்சினைகளிலிருந்து வேறானவை. தீண்டாமை, சாதிபேதம், பாலியல் தாக்குதல், சுயசாதி ஒடுக்குமுறை ஆகியவற்றைப் போராட்ட மையமாக வைக்கிறது.

கடுமையான உடலுழைப்பு, குடும்பச் சுமை, பொறுப்பற்றக் கணவனின் பணியை மேற்கொள்ளுதல், கடைநிலைத் தொழிலினை செய்தல், ஆணுக்கு ஐிணாயன ஊதியம் இன்மை இவைபோன்ற பல சிக்கல்களை எதிர்க்கொள்கிறது. கல்வியறிவு, வேலைவாய்ப்பு இவற்றில் ஒப்பீட்டளவில் பிற சாதிப் பெண்களைவிடப் பின் தங்கிய நிலமை, குடிநீர், எரிபொருள், கழிப்பிடம், மருத்துவ சுகாதர வசதி, கல்வி நிலையம் முதலான அடிப்படை வசதிகள் குறைவான சூழலில் வாழ்க்கை நடத்துதல். கிராமப் பஞ்சாயத்து மற்றும் பிற அமைப்புகளில் சாதியின் அடிப்படையில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாவது. பிறசாதிப் பெண்களைகப் போல் இல்லாமல் உடைமைகள் அற்றவர்களாக இருத்தல், இவற்றின் பின்னனியில் இந்து சாதிப் பெண்ணியத்திலிருந்து தலித் பெண்ணியம் வேறுபடுகிறது. அவ்வகையில் தலித் பெண்ணியம் என்பது சாதி, மத. வர்க்க அடிப்படையில் உருவான ஆணாதிக்கத்தை எதிர்ப்பது ஆகும்.

**தலித் பெண்கள்**

சமூக ரீதியாக ஏற்றத்தாழ்வுகளையும்; அதிகார உறவுகளிலும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு மணித்துளியும் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் தலித் பெண்கள், பொருளாதார நிலையில் உழைப்புச் சுரண்டலில் சிக்குண்டு உழைப்போடு மட்டுமே உறவாடி தங்களின் முகவரிகளை இழந்து, மலம் அள்ளுபவர்களாகவும், துணி வெளுப்பவர்களாகவும், களம் தூற்றுப்பவர்களாகவும், விவசாயப் பண்ணை அடிமைகளாகவும், சாலை பெருக்குபவர்களாகவும், கடைநிலைத் தொழிலை செய்பவர்கள் தலித் பெண்கள் ஆவர். மேலும், தாசியாக, தேவதாசியாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டு சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், சமயத்தோடும், சடங்குகளோடும், பின்னப்பட்டு வாழ்வின் விளிம்பு நிலைக்கு தள்ளி, இப்பிறவி நம்பிக்கையை ஊட்டி இப்பிறவியில் இதுதான் நமக்கு வாழ்வு என்று தனக்குத்தானே சமாதனம் கூறிக்கொண்டு தேவதாசியாக மாறும் (அல்லது) மாற்றப்பட்ட பெண்களே தலித் பெண்கள் ஆவர்.

ஆணாதிக்கம், சாதியம், அரசியல், பொருளாதாரம், கலை, கலாச்சாரம், போன்ற அனைத்துக் காரணிகளாலும் ஒடுக்கப்பட்டவர்களே தலித் பெண்கள். இந்திய மண்ணின் புதல்வியான கறுப்பு நிறத் தீண்டத்தகாத மகளிர், தங்களின் ஆடவர் குழாத்துடன ஆரிய ஊடுருவலை எதிர்த்ததன் விளைவாக அடிமைகளாக்கப்பட்டவர்கள். சிந்து சமவெளியில் உலகின் உன்னத நாகரிகத்தைக் கட்டியெழுப்பியவர்கள். ஊருக்கு வெளியே சனாதான இந்து சாதி முறையினால் சேரிகளில் வாழ தள்ளப்பட்டவர்கள், அரசியல் அமைப்புச் சட்டம் இவர்களை அட்டவணைச் சாதியினர் எனப் பட்டியிலிடுகிறது என்று பி.எம். லீலாகுமாரி தலித் பெண்கள் என்னும் நூலில் இக்கருத்தை வெளியிட்டுள்ளா◌ார். பொருளாதாரச் சுரண்டல்,

ஆணாதிக்க ஒடுக்கமுறை போன்றவற்றோடு சாதிய அடக்குமுறையினாலும் பாதிக்கப்;பட்டவர்கள் ஒடுக்கப்பட்ட பெண்கள் தலித் பெண்கள் எனலாம்.

**முடிவுரை**

ஆணாதிக்கத்திற்கு எதிராக பெண்ணியக் கருத்தாங்கங்கள், கோட்பாடுகள், அமைப்புகள் என பல தோன்றினாலும். தலித் பெண்களின் ஒடுக்குமுறைகளையும் உரிமைகளையும் வெண்றெடுப்பவர்களாக தலித் பெண்களே உள்ளனர் என்பதை இக்கட்டுரை வெளிப்பத்துகிறது எனலாம்.

**குறிப்புகள்**

[1] அன்புக்கரசி. *தலித் பெண்ணியம்.* தலித் ஆதார மய்யம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி. மதுரை – 67 முதற்பதிப்பு- 1999.

[2] *என்சைக்லோபீடியா பிரிடானிகா.* இன்க் சிகோகோ, தொகுப்பு 15,இயல் 9, ப.154.

[3] குணசேகரன் கரு. அழ. *புதிய கோடாங்கி (க.தொ).* சித்ரா அடுக்கம். சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை- 94, பதிப்பு ஆண்டு –ஜீன், 1995.

[4] சுப்ரமணியம், நா. *இந்திய சிந்தனை.* சவுத் ஏசியன் புக்ஸ். யாழ்ப்பாணம், இலங்கை. முதற்பதிப்பு- ஜீன் - 1993.

[5] பிரேமா. இரா. *பெண்ணிய அணுகுமுறைகள்.* உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை- 13, முதற்பதிப்பு 1994.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.